**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26–ம் நாள்)

**CNR.No.TNED040011282015**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.126/2015**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஈரோடு தாலூக்கா காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண். 16/2014 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

A1) செல்வம் (எ) செல்லத்துரை (வயது 37/2026),
த/பெ. செல்லமுத்து,
305, நெக்குந்தி,
எர்ரபையன அள்ளி, பென்னாகரம்,
தர்மபுரி மாவட்டம்.

A2) ஆனந்த் (வயது 38/2026),
த/பெ. ராமசாமி,
200 முதல் வீதி,
அரிஜன காலனி,
ஆணைக்கல்பாளையம்,
ஈரோடு மாவட்டம். ... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 06.01.2014 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 09.01.2014 | |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | A1-09.01.2014<br>A2-10.01.2014 | A1-20.02.2014<br>A2-06.02.2014 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 06.11.2015 | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:08:56 +0530

<table>
<tr><td>5.</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">12.08.2025</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">1) 2–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.108/2014–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 24.01.2014–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>2) 1–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.238/2014–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 18.02.2014–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>3) 2–ம் எதிரி தாக்கல் செய்த C.M.P.No.256/2014–ல் கு.வி.மு.ச பிரிவு 437–ன் கீழான மனு கடந்த 06.02.2014–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="8">7.</td><td rowspan="8">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>16.09.2025</td><td>16.09.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>16.09.2025</td><td>16.09.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.10.2025</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>07.10.2025</td><td>07.10.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>15.10.2025</td><td>15.10.2025</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>23.10.2025</td><td>23.10.2025</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>04.11.2025</td><td>04.11.2025</td></tr>
<tr><td>8.</td><td>எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)–ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">12.11.2025</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">28.06.2022-A2<br>26.08.2024-A2</td><td>26.06.2023-A2<br>12.08.2025-A2</td></tr>
</table>



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:02 +0530

| | | |
|---|---|---|
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 28.01.2026 |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 10.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 16.11.2015–ம் தேதி, C.C.No.126/2015 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட 1–ம் எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.I.C.வாசுதேவன் அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட 2–ம் எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.ரூபன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–தீர்ப்புரை–**

இந்த வழக்கு குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 173(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 06.01.2014–ம் தேதி, 22.00 மணிமுதல் 07.01.2014–ம் தேதி, 06.00 மணிக்குள்ளான காலத்தில் ஈரோடு, கதவு எண்.256, தாமரை நகர், ஆணைக்கல்பாளையம், சாட்சி–1 திருமதி.வெண்ணிலா என்பவரது வீட்டினுள் எதிரிகள் இருவரும் களவாட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து பீரோவினுள் வைக்கப்பட்டிருந்த ரொக்கம் ரூபாய் பத்தாயிரத்தை களவாடி சென்ற குற்றத்திற்காக 1 மற்றும் 2–ம் எதிரிகள் மீது இந்திய



VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.03.10 18:09:10 +0530

தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457, 380-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஈரோடு தாலூக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், 1 மற்றும் 2-ம் எதிரிகளுக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், 1 மற்றும் 2-ம் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457, 380-ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1)(b)-ன் படி உத்தரவிடப்பட்டு 1 மற்றும் 2-ம் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு 1 மற்றும் 2-ம் எதிரிகளிடம் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457, 380-ன் படியான குற்றங்களுக்கான முகந்திரம் இருந்த காரணத்தினால், அதுகுறித்து வினவியபோது 1 மற்றும் 2-ம் எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்கள். ஆவணங்களை ஆராய்ந்ததன் அடிப்படையில் 1 மற்றும் 2-ம் எதிரிகள் இந்நீதிமன்றம் விசாரிக்கக்கூடிய இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457(1), 380(1)-ன் படி குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என அனுமானம்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:17 +0530

செய்ய போதிய காரணங்கள் இருந்ததால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 240(1)–ன் படி 1 மற்றும் 2–ம் எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457(1), 380(1)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 242–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 10 சாட்சிகளில், 7 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

6. கடந்த 06.01.2014 ம் தேதி, அ.சா.1 திருமதி.வெண்ணிலா, அ.சா.1–ன் அம்மா மற்றும் அ.சா.1–ன் தம்பிகளுடன் அவர்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீட்டில் இரவு தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு, பக்கத்தில் இருக்கும் அவர்களின் ஓலை வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது என்றும், துணிகள் களைந்து கிடந்தது என்றும், அ.சா.1–ன் மகளின் 5 செட் தங்கதோடுகள், தங்க செயின் மொத்தம் 2 1/2 பவுன் மற்றும் பணம் ரூ.10,000/– திருடு போயிருந்தது என்று தாலுக்கா காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக அ.சா.ஆ.1 புகார் அளித்ததாகவும், அ.சா.1 பதற்றத்தில் தங்க நகைகள் காணாமல் போய்விட்டதாக புகார் அளித்துவிட்டதாகவும், நன்றாக தேடி பார்த்தபோது கவரிங் நகைகள் மட்டும் காணாமல் போனது தெரியவந்தது என்றும், போலீசாரிடம் இது பற்றி கூறியதாகவும், பணம் ரூ.10,000/– மற்றும் கவரிங்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:22 +0530

நகைகள் மட்டுமே திருடுபோயிருந்ததுள்ளது. இதுசம்மந்தமாக கடந்த 09.01.2014–ம் தேதி, அ.சா.1 திருமதி.வெண்ணிலா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.1 எழுத்து மூலமான புகாரை அ.சா.7 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஆதிகேசவன் பெற்று குற்ற எண்.16/2014 சட்டபிரிவுகள் 457, 380 இதசவில் அ.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

(ii) பின்னர் அ.சா.7 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ஆதிகேசவன் அன்றைய தினம் 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.5 திரு.சரவணன் மற்றும் அ.சா.6 திரு.பாலமணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.8 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.12 மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கு சாட்சிகள் அ.சா.1 திருமதி.வெண்ணிலா, ராஜகோபால், சாட்சி–2 திருமதி.கண்ணம்மாள், அ.சா.2 திரு.அய்யப்பன், அ.சா.5 திரு.சரவணன், அ.சா.6 திரு.பாலமணிகண்டன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை தேடி சென்றபோது ஆணைக்கல்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே இரகசிய தகவலாளி அடையாளம் காட்ட நபரை பிடித்து விசாரித்ததில் தனது பெயர் செல்வம் (எ) செல்லதுரை, வயது 25, த/பெ. செல்லமுத்து, பெண்ணகரம் என முன்னுக்கு பின் முரணாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை 12.15 மணிக்கு கைது செய்து, சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா.5 திரு.சரவணன், அ.சா.6 திரு.பாலமணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

(iii) பின்னர் எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.7000/– த்தை மேற்படி



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:27 +0530

சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.13 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், 14.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி செல்வம் (எ) செல்லதுரையை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், பின்னர் 10.01.2014–ம் தேதி தகவலாளி கொடுத்த தகவலின்பேரில் முள்ளாம்பரப்பு பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த சந்தேகத்திற்குரிய நபரை பிடித்து விசாரித்தரில் முன்னுக்கு பின் முரணாக கூறி குற்றத்தை ஒப்புக் கொண்ட ஆனந்தன், வயது 24, த/பெ.ராமசாமி, ஆணைக்கல்பாளையம் என்பவரை 9.00 மணிக்கு கைது செய்து அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 9.15 –10.00 மணி வரை சாட்சிகள் சாட்சி–6 திரு.பிரபு, அ.சா.3 திரு.தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.500/– மற்றும் ஒரு அரைஞாண் கொடி, ஒரு கவரிங் செயின் ஆகியவற்றை அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, 12.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி ஆனந்தனை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.16 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், 2 வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் நாடார் மேடு அக்ஷயா ஜூவல்லரியில் தங்க நகையை அடமானம் வைக்க கடை உரிமையாளர் விஷ்ணுபிரகாசு உரசி பார்த்து, கவரிங் என கூறியதன் பேரில் 18.01.2014 ம் தேதி கடை உரிமையாளர் அ.சா.4 திரு.விஷ்ணுபிரகாசை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வாதியின் புகாரில் தங்க நகை என கொடுத்தது சம்மந்தமாக விசாரிக்க அக்கம் பக்கத்தினர் சொன்னதின் பேரில்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:33 +0530

தவறாக வாக்குமூலம் கொடுத்துவிட்டதாக கூறியதை மறு வாக்குமூலமாக பதிவு செய்தும், பின்னர் 27.09.2014 ம் தேதி, தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து 1 மற்றும் 2–ம் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், 1 மற்றும் 2–ம் எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனக் குறிப்பிட்டுவிட்டு, பின்னர் சாட்சிகள் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தவில்லை. எனவே 1 மற்றும் 2–ம் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**<u>இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 மற்றும் 2–ம் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457(1), 380(1)–ன் கீழான குற்றச்சாட்டுகள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**<u>தீர்வு:–</u>**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. 1 மற்றும் 2–ம் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள், எதிரிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.3 மற்றும்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:39 +0530

பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் 1 மற்றும் 2–ம் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் குற்றம் குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர்கள் தங்களுடைய முதல் விசாரணையில் போலீசார் தங்கள் முன்னிலையில் போலீசார் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், மேலும் இந்த வழக்கில் புலன்விசாரணை குறித்து அ.சா.7 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் 1 மற்றும் 2–ம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11. அ.சா.1 இவ்வழக்கின் திருட்டுபோன பொருட்களின் உரிமையாளர் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் என்பதும், அ.சா.2, அ.சா.1–ன் தம்பி என்பதும், அ.சா.3 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி என்பதும், அ.சா.4 திருடு நகைகளை சோதனை செய்த கடையின் உரிமையாளர் என்பதும், அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகிய சாட்சிகள் பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் என்பதும், அ.சா.7 இவ்வழக்கின் புலன்விசாரணை அலுவலர் என்பதும் அரசு தரப்பு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:43 +0530

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. கடந்த 06.01.2014–ம் தேதி, 22.00 மணிமுதல் 07.01.2014–ம் தேதி, 06.00 மணிக்குள்ளான காலத்தில் ஈரோடு, கதவு எண்.256, தாமரை நகர், ஆணைக்கல்பாளையம், அ.சா.1 திருமதி.வெண்ணிலா என்பவரது வீட்டினுள் களவாட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து பீரோவினுள் வைக்கப்பட்டிருந்த ரொக்கம் ரூபாய் பத்தாயிரம் மற்றும் தங்கத்தோடு –8 – 1 ¼ பவுன், குழந்தை செயின்–1 பவுன், மோதிரம் ¼ பவுன் – மொத்தம் மதிப்பு ரூ.32,500/– உள்ளதை களவாடி சென்றுள்ளதாக கடந்த 09.01.2014–ம் தேதியன்று அ.சா.1 திருமதி.வெண்ணிலா ஈரோடு தாலூக்கா காவல்நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் அளித்துள்ளார். மேற்படி புகாரை பெற்றுக்கொண்டு அ.சா.7 அ.சா.ஆ.11–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வழக்குச் சம்பவம் 05.01.2014–ம் தேதி இரவு நடந்ததாகவும், மறுநாள் 06.01.2014–ம் தேதி சம்பவத்தை பற்றி தெரிந்து கொண்டதாகவும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் குறுக்குவிசாரணையில் தெரிவித்துள்ளபோதும், புகாரில் 06.01.2014–ம் தேதி இரவு அன்று சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளது ஏற்கும் படியாக இல்லை என்பதோடு, ஏன் உடனடியாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்படவில்லை என்பதற்கும் தகுந்த விளக்கம் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

13. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திருமதி.வெண்ணிலா தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 06.01.2014 ம் தேதி, தான், தனது அம்மா மற்றும் தனது தம்பிகளுடன் தாங்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீட்டில் இரவு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:49 +0530

தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு, பக்கத்தில் இருக்கும் தங்கள் ஓலை வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது என்றும், துணிகள் களைந்து கிடந்தது என்றும், தனது மகளின் 5 செட் தங்கதோடுகள், தங்க செயின் மொத்தம் 2 1/2 பவுன் மற்றும் பணம் ரூ.10,000/- திருடு போயிருந்தது என்று தாலுக்கா காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக அ.சா.ஆ.1 புகார் அளித்ததாகவும், தான் பதற்றத்தில் தங்க நகைகள் காணமால் போய்விட்டதாக புகார் அளித்துவிட்டதாகவும், நன்றாக தேடி பார்த்தபோது கவரிங் நகைகள் மட்டும் காணாமல் போனது தெரியவந்தது என்றும், போலீசாரிடம் இது பற்றி கூறியதாகவும், பணம் ரூ.10,000/- மற்றும் கவரிங் நகைகள் மட்டுமே திருடுபோயிருந்தது என்றும், 2, 3 நாட்கள் கழித்து திருடிய நபர்களை போலீசார் பிடித்துவிட்டதாகவும், அ.சா.ஆ.2 புகைப்படத்தில் கண்டுள்ள ரூ.7,000/- பணம் மட்டும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார்கள் என்றும், பணத்தை தான் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும்போது, உண்மையை மறைத்து மிகைப்படுத்தி தங்க நகைகள் காணாமல் போய்விட்டதாக கூறி காலதாமதமாக புகார் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டுள்ள அ.சா.2 திரு.ஐயப்பன் தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.1 வெண்ணிலா தனது அக்கா என்றும், பட்டியல் சாட்சி-2 கண்ணம்மாள் தனது அம்மா என்றும், 06.01.2014 ம் தேதி தான்,



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:54 +0530

தனது அம்மா மற்றும் தனது அக்கா மற்றும் தனது அண்ணனுடன் தாங்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீட்டில் இரவு தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு, பக்கத்தில் இருக்கும் தங்கள் ஓலை வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது என்றும், துணிகள் களைந்து கிடந்தது என்றும், தங்கள் வீட்டில் இருந்த 5செட் தோடு, செயின் என மொத்தம் 2 1/2 பவுன் நகை மற்றும் பணம் ரூ.10000/- திருடு போயிருந்தது என்று தாலுக்கா காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக தனது அக்கா புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. நகைகளை சோதனை செய்து போலியான நகை என கண்டுபிடித்த அ.சா.4 திரு.விஷ்வபிரகாஷ் தன்னுடைய சாட்சியத்தில் தான் இதற்கு முன்பு நாடார் மேட்டில் அக்ஷயா ஜூவல்லரி என்ற பெயரில் கடை வைத்திருந்ததாகவும், 11 வருடத்திற்கு முன்பாக ஒரு நபர் தனது கடைக்கு வந்து செயின் மற்றும் அரைஞாண் கயிற்றை தன்னிடம் கொடுத்து தங்கமா என பரிசோதித்து பார்க்கக் கூறியதன்பேரில் தான் பார்த்துவிட்டு, அது கவரிங் என்று அவரிடம் திருப்பிகொடுத்து விட்டதாகவும், 11 வருடங்கள் ஆனதால் கடைக்கு வந்த அந்த நபரை தன்னால் அடையாளம் சொல்ல முடியாது, அவர் பெயரும் தனக்கு தெரியாது என்று அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் மேலும் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:09:59 +0530

16. 1 மற்றும் 2 எதிரிகள், அ.சா.1 திருமதி.வெண்ணிலா அவர்களின் வீட்டில் திருடியதை பார்த்ததாக எவ்வித சாட்சியும் அரசுதரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை. இந்நிலையில், 1 மற்றும் 2 எதிரிகளை இவ்வழக்குடன் தொடர்பு படுத்தக்கூடியது 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இவ்வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜரும் ஆகும்.

17. அ.சா.7 புலன்விசாரணை அதிகாரி கூறுவது போல் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்களா, அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள பணம் மற்றும் பொருட்கள் 1 மற்றும் 2 எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டதா என்பதை பரிசீலனை செய்ததில், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 திரு.தங்கராஜ் தன்னுடைய சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், தேதி, வருடம் ஞாபகம் இல்லை என்றும், ஒருநாள் தான் முள்ளாம்பரப்பு பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது தாலூக்கா காவல்நிலைய உதவி ஆய்வாளர் தன்னிடம் கையொப்பம் பெற்றார் என்றும், எதற்காக என்று தனக்கு தெரியவில்லை என்றும், வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி தன்னிடம் காண்பிக்கப்படும் 2—ம் எதிரி ஆனந்தின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று கூறியதால் அரசுதரப்பால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:05 +0530

சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 திரு.சரவணன் தன்னுடைய சாட்சியத்தில் 06.01.2014 ம் தேதி, எதிரிகள் ஆனந்தன் மற்றும் செல்வம் இரண்டு பேரும் தனது அக்கா வீட்டில் கார வேலை செய்து முடித்துவிட்டு 6.00 மணிக்கு வீட்டுக்கு சென்றுவிட்டார்கள் என்றும், பின்னிட்டு அடுத்த நாள் காலை தனது அக்கா பீரோ வைத்திருக்கும் தனி அறைக்கு சென்று பார்த்தபோது, பீரோவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது என்றும், அதில் இருந்த 2 1/2 பவுன் தங்க நகை மற்றும் ரூ.10,000/- காணாமல் போயிருந்தது என்றும், தானும், தனது அக்கா மற்றும் அ.சா.6 திரு.பால மணிகண்டன் ஆகியோர் தாலூக்கா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தபோது எதிரிகள் பற்றி தகவல் தெரிந்து கொள்ள போலீசார் தங்கள் மூவரையும் ஜீப்பில் அழைத்துச் சென்றனர் என்றும், அப்போது ஆணைக்கல்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது, தங்களை பார்த்துவிட்டு ஓட முயற்சித்த எதிரி செல்வத்தை போலீசார் பிடித்து காவல்நிலையம் அழைத்துச் சென்று விசாரித்தனர் என்றும், அப்போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டு தன்னிடம் இருந்த அ.சா.ஆ.2 புகைப்படத்தில் கண்டுள்ள ரூ.7000/- த்தை போலீசாரிடம் கொடுத்தார் என்று கூறி தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், 1-ம் எதிரி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று கூறியதால் அரசுதரப்பால் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். 05.01.2014-ம் தேதி, இரவு சம்பவம் நடந்ததாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் குறுக்குவிசாரணையில் கூறியுள்ளநிலையில், அதற்கு மாறாக



VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.03.10 18:10:10 +0530

எதிரிகள் அ.சா.5, தனது அக்காவான அ.சா.1–ன் வீட்டில் 06.01.2014–ம் தேதி வேலையை செய்து முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றபிறகு மறுநாள் காலை பார்த்தபோது நகை மற்றும் பணம் திருடுபோனதாக கூறியுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. மேலும் எதிரிகள் தங்கள் வீட்டில் காரவேலை செய்தது குறித்து ஏன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் புகாரிலும், சாட்சியத்திலும் தெரிவிக்கவில்லை என்பதற்கும் தகுந்த விளக்கம் முன்வைக்கப்படவில்லை. அரசுதரப்பு குறுக்குவிசாரணையின் போது பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், எதிரி செல்வத்தை பிடித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும் அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளபோதும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறியுள்ளது அரசுதரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளதால் அ.சா.5–ன் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. மற்றொரு பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.6 திரு.பாலமணிகண்டன் தன்னுடைய சாட்சியத்தில் 09 ம் தேதி, 2014 ம் வருடம், மாதம் ஞாபகம் இல்லை என்றும், காலை 11.00 மணியளவில் தான் அ.சா.1 வெண்ணிலா வீட்டின் வழியாக சென்றபோது கூட்டமாக இருந்தது என்றும், அங்கு சென்று பார்த்தபோது வெண்ணிலா வீட்டில் திருடு போனது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்து அ.சா.ஆ.8 பார்வை மகஜரில் தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், பின்னிட்டு போலீசார் விசாரணைக்காக ஆணைக்கல்பாளையம் சென்றபோது, தானும் சென்றதாகவும், அங்கு போலீசாரைக்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:15 +0530

கண்டவுடன் ஆனந்த் அங்கிருந்து ஓடினார் என்றும், போலீசார் அவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது வெண்ணிலா வீட்டில் நகைகள் மற்றும் பணம் ரூ.10,000/- த்தை திருடியதாக ஒப்புக் கொண்டார் என்றும், பிறகு அவரிடமிருந்த பணம் ரூ.7000/- த்தை போலீசாரிடம் ஒப்படைத்தார் என்று கூறி தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், 1-ம் எதிரி செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று கூறியதால் அரசுதரப்பால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிகளின் அடையாளம் குறித்து சரியாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.6 தனது குறுக்குவிசாரணையில் *'அ.சா.ஆ.8 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களில் நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். அ.சா.1 வெண்ணிலாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது தம்பி எனது நண்பர். அதன் அடிப்படையில் தான் நான் காவல்நிலையம் சென்றேன் என்றால் ஆமாம். ஆஜர் எதிரியை இதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் சம்பவத்திற்கு பின்னிட்டு தான் பார்த்தேன். நான் கையொப்பம் செய்தபோது ஆஜர் எதிரியும், மற்றொரு எதிரியும் இருந்தார்கள்."* என்று சாட்சியம் அளித்துள்ளது அரசுதரப்பு வழக்கின் மீது மேற்கொண்டு சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்துவதால் அ.சா.6-ன் சாட்சியமும் அரசுதரப்பிற்கு உதவியாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. எனவே மேலே ஆராய்ந்த வகையில் அ.சா.3 திரு.தங்கராஜ், அ.சா.5



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:20 +0530

திரு.சரவணன் மற்றும் அ.சா.6 திரு.பாலமணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் தான் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் என்பதையும், அதன் அடிப்படையில் பணம், அரைஞான் கயிறு மற்றும் சிறுகவரிங் செயின் ஆகியவைகள் அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜர்கள் மூலம் கைப்பற்றப்பட்டது என்பதையும் அரசுதரப்பு ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது.

21. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்களின் சாட்சியங்கள் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லாத நிலையில், தற்போது எஞ்சி இருப்பது இவ்வழக்கின் புலன்விசாரணை அலுவலரான அ.சா.7–ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.7–ன் மூலமாக அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 திருமதி.வெண்ணிலா அளித்த அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.7–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.7–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் 1 மற்றும் 2–ம் எதிரிகள் மீது



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:26 +0530

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2−ம் எதிரிகளுக்கு வழங்கி, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 457(1), 380(1)−ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1 மற்றும் 2−ம் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 1 மற்றும் 2−ம் எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 248(1)−ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

23. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1 மற்றும் 2−ம் எதிரிகள் பிணையில் இருந்ததால் 1 மற்றும் 2−ம் எதிரிகளும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

24. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண்.188/2015−ல் உள்ள பணம் ரூ.7000/− [ரூபாய் ஏழாயிரம் மட்டும் ரூ.1000x7=7,000/−], பணம் ரூ.500/− (ரூபாய் ஐநூறு மட்டும் ரூ.500x1=500/−), சுமார் 62 செமீ நீளமுள்ள இருபுறமும் சிறு வளையத்துடன் கூடிய சிறு கவரிங் அரைஞாண் கயிறு (1) ஒன்று, சுமார் 63 செமீ நீளம் உள்ள வளையத்தில் ஜாயிண்ட் செய்யப்பட்ட சிறு கவரிங் செயின் (1) ஒன்று ஆகியவற்றை மேல்முறையீடு காலத்திற்கு பின்னிட்டு அதன் உரிமையாளர் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கான காலம் முடிந்த பின்னர் 6 மாதக்காலத்திற்குள் மேற்சொன்ன சொத்துக்களை எவறும் உரிமை கோராத பட்சத்தில் மேற்படி பணத்தை



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:31 +0530

அரசுக்கு உடமையாக்க வேண்டும் எனவும், சுமார் 62 செமீ நீளமுள்ள இருபுறமும் சிறு வளையத்துடன் கூடிய சிறு கவரிங் அரைஞாண் கயிறு (1) ஒன்று, சுமார் 63 செமீ நீளம் உள்ள வளையத்தில் ஜாயிண்ட் செய்யப்பட்ட சிறு கவரிங் செயின் (1) ஒன்று ஆகியவற்றை சட்டநடைமுறைகளை பின்பற்றி அகற்றம் செய்ய வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.வெண்ணிலா | நிகழ்நிலை புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.ஜயப்பன் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.தங்கராஜ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.விஷ்வபிரகாஷ் | திருடு நகைகளை சோதனை செய்த கடையின் உரிமையாளர் |
| 5. | அ.சா.5 | திரு.சரவணன் | பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.பாலமணிகண்டன் | பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 7. | அ.சா.7 | திரு.ஆதிகேசவன் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 16.09.2025 | புகாரிலுள்ள அ.சா.1–ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 16.09.2025 | ரூ.7000/– ரூபாய் நோட்டுகள் அடங்கிய புகைப்படம் | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | 07.10.2025 | 2–ம் எதிரி ஆனந்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | 07.10.2025 | 2–ம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.3 |
| 5. | அ.சா.ஆ.5 | 15.10.2025 | பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |
| 6. | அ.சா.ஆ.6 | 15.10.2025 | 1–ம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |
| 7. | அ.சா.ஆ.7 | 15.10.2025 | 1–ம் எதிரி செல்வம் (எ) செல்லதுரையின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.5 |
| 8. | அ.சா.ஆ.8 | 23.10.2025 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| 9. | அ.சா.ஆ.9 | 23.10.2025 | 1–ம் எதிரி செல்வம் (எ) செல்லதுரையின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து | அ.சா.6 |
| 10. | அ.சா.ஆ.10 | 23.10.2025 | 1–ம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து | அ.சா.6 |



VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:42 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | அ.சா.ஆ.11 | 04.11.2025 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| 12. | அ.சா.ஆ.12 | 04.11.2025 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| 13. | அ.சா.ஆ.13 | 04.11.2025 | பணம் ரூ.7000/–யை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.7 |
| 14. | அ.சா.ஆ.14 | 04.11.2025 | பணம் ரூ.500/–யை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.7 |
| 15. | அ.சா.ஆ.15 | 04.11.2025 | படிவம் 91 | அ.சா.7 |
| 16. | அ.சா.ஆ.16 | 04.11.2025 | படிவம் 91 | அ.சா.7 |

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசு தரப்புச் சான்று பொருள் : ஏதுமில்லை.**

**குறிப்பு :**

1. 1 மற்றும் 2 எதிரிகள் பிணையில் உள்ளார்கள்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 18:10:50 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு